(ஆ) ஆம் எனில், தேவையான மருத்துவர்கள் நியமிக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கறம்பக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை இரண்டு. தற்பொழுது இரண்டு மருத்துவர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

156—

தலைவாசலில் அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்துதல்.

*21462—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசலில் அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

158—

கெலமங்கலம் பிரதம கூட்டுறவுச் சங்கத்தை இரண்டாகப் பிரித்தல்.

*20855—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெலமங்கலம் பிரதம கூட்டுறவுச் சங்கம் (Kelamangalam Co-operative Marketing Society) ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டத்தினைக் கொண்ட பெரிய சேவை நிறுவனமாக உள்ளதால் இதனை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவு துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இல்லை. ஆயினும், ஓசூர் வட்ட விவசாயிகளின் நலன் கருதி சூளகிரியில் ஒரு கிளை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.